எம்.சி.ஓ.பி எண்: 5314/2024 தேதி: 16.03.2026

மசா. : 2

பெயர் :யுவராஜ்

த/பெ. : ரவி

வயது : 25

**<u>சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 16 மட்டும் தாக்கல் செய்கிறேன்.

**1ம் எதிர்மனுதாரர்தரப்பு குறுக்குவிசாரணை இல்லை என கூறப்பட்டது.**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்து சம்பந்தமாக வேறு நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கவில்லை. புகார் காவல்நிலையம் சென்று நான் கொடுக்கவில்லை. நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பானை வரவில்லை. இந்த விபத்தில் 3 வாகனங்கள் சம்பந்தப்பட்டுள்ளது என்றால் சரி. விபத்து நடந்த சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரி. விபத்துநடந்த இடம் யூடேன் செய்யும் இடம் என்றால் சரி. எந்த ஒரு வாகனமும் யூடேன் செய்யும்போது மெதுவாகதான் செல்லவேண்டும் எ்னறால் சரி. இருசக்கரவாகனத்தில் பயணம் செய்தவர் கிழே விழுந்தபிறகு பின்னால் வந்த லாாி அவர் மீது ஏறவில்லை என்றால் அவர் இறந்திருக்கமாட்டார் என்றால் சரி. லாாியின் முன்பக்க டயர் இருசக்கரவாகனத்தில் கிழே விழுந்தவர் மீது தலையில் ஏறிவிட்டது. அதனால்தான் அவர் இறந்துவிட்டார். இருசக்கரவாகனத்தில் சென்றவர் தலைக்கவசம் அணியாமல் சென்றார் என்றால் சரி. அவர் தலைக்கவசம் அணிந்திருந்தால் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரி. லாாி வேகமாக வந்தது. லாாி மெதுவாக வந்திருந்தால் பிரேக் பிடித்து நிறுத்திருக்கலாம் விபத்தை தவிர்திருத்து உயிர் இழப்பை தடுத்திருக்கலாம். உயிர் இழப்பிற்கு லாாி டிரைவர்அஜாக்கிருதையாக வேகமாக வந்ததது தான் காரணம் என்றால் சரி.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் அயனாவரத்தில் பிளம்பர் வேலை செய்கிறேன். விபத்து நடந்த சமயத்தில் நான்அங்கு இல்லை என்றாலும் மனுதாரருக்கு ஆதாரவாக பொய் சாட்சிஅளிக்கிறேன் என்றால் சரியல்ல. சென்னையிலிருந்து

பேங்களூர் செல்லும் சாலையில் லாாி வந்துகொண்டிருந்து. எதிர்திசையில் பேங்களூரிலிருந்து சென்னை மார்க்கமாக இருசக்கரவாகனமும், காரும் வந்தது. இருசக்கரவாகனம் யூடேன் எடுக்க முயற்சி செய்யும் போது பின்னால் வந்த கார் வேகமாக இருசக்கரவாகனத்தில் மீது மோதியதால் இருசக்கரவாகனத்தை ஓட்டிவந்தவர் தூக்கி எறியப்பட்டு சாலையின் மறுபுறம் விழுந்தார். அதன் பிறகு அவர் மீது லாாியின் பின்பக்க டயர் ஏறி இறந்துவிட்டார். கார் இருசக்கரவாகனத்தின் மீது மோதமால் இருந்திருந்தால் இந்த விபத்தே ஏற்பட்டு இருக்காது என்றால் சரி. இந்த விபத்து முழுக்க முழுக்க கார் டிரைவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரிதான். கார் டிரைவர் கவனமாக வந்திருந்தால் இந்த விபத்தை தடுத்திருக்கலாம்.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.